06.03.2025 MCOP No.7/2021

சாட்சி : PW 4 காந்தி என்ற குப்பான்செட்டி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1.நான் காரைக்குடி கல்லூரிச்சாலையில் சிவா ஐஸ்பார் என்ற பெயரில் கடை நடத்திவருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கல்லூரிச் சாலை என்பது அகலமான 100 அடி ரோடு என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்த சொக்கலிங்கம் எனக்கு மாமனார் முறை என்றால் சரிதான். சொக்கலிங்கம் ரோட்டை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை, அவர் நடந்து வந்தபோது விபத்து ஏற்பட்டது. சொக்கலிங்கம் வடக்கு நடந்து சென்று கொண்டு பின்னர் தெற்கு பக்கமாக திரும்பியபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. மேற்படி விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். என்னை காரைக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரித்தனரா என்றால் இல்லை. இந்த விபத்து இறந்துபோன நபரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றும், நான் அவர் உறவினர் என்பதால் அவர் குடும்பத்தாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.